# திருநெல்வேலி மாநகராட்சி

## 29.05.2023 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்ட பொருள் மற்றும் தீர்மானம் விவரம்

---

## பொருள்

1. திருநெல்வேலி மாநகராட்சியில் பொதுநிதியின் கீழ் இணைபபு I-ல் கண்டுள்ள 213 பணிகளுக்கு அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மதிப்பீட்டு தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேலை ஆணை வழங்கி பணிகள் செய்தமைக்கு அனுமதித்து மாமன்றத்தில் பதிவு செய்து அங்கீகாரம் பெறுவதற்கும். மேலும் இணைப்பு II-ல் கண்டுள்ள71 பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால் 71 பணிகள் சிப்பமாக மாற்றி மறுஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், பணிகள் மேற்கொள்ள அனுமதித்து மாமன்றத்தில் பதிவு செய்து அங்கீகாரம் பெறுவதற்கும்.

**அலுவலக குறிப்பு:**

அ) பொது நிதியின் கீழ் அனுமதி பெற்று இணைபபு I-ல் கண்டுள்ள 213 பணிகள் மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுதிக்கலாம்.

ஆ) இணைப்பு I-ல் கண்டுள்ள 213 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கலம் எண்:6-ல் கண்டுள்ள, மதிப்பீட்டு தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தத்துக்கு மாமன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

இ) இணைப்பு II ல் கண்டுள்ள71 பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால் 71 பணிகள் சிப்பமாக மாற்றி மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும், பணிகள் மேற்கொள்ளஅனுமதித்து மாமன்றத்தில் பதிவு செய்து அங்கீகாரம் வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 246 அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இ அங்கீகரிக்கப்பட்டது.**

---